Source: *Tamil Murasu*, p3
Date: 18 September 2018

# சிங்கப்பூர் மாணவர்கள் வெளிநாடுகளில் வேலையிடப் பயிற்சி பெற புதிய பயிலகம்

புத்தாக்கத்திறனில் சிறந்து விளங்குவோருக்கு உலகளாவிய கண்ணோட்டத்தை வழங்க, புதிய பயிலகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதன்வழி, வெளிநாடுகளில் செயல்படும் நிறுவனங்களில் சிங்கப்பூர் மாணவர்கள் வேலையிடப் பயிற்சி பெற முடியும்.

இவ்வாண்டின் 'புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சிங்கப்பூர் வாரம்' எனப்படும் நிகழ்ச்சியில் நிதி அமைச்சர் ஹெங் சுவீ கியட் நேற்று இதனை அறிவித்தார்.

சிங்கப்பூரில் புத்தாக்கத்தில் சிறப்பாக செயல்படுபவர்கள் தொழில்நுட்ப ஆற்றல்களை வளர்ப்பதோடு உலகளவில் மற்றவர்களுடன் இணைந்து பணியாற்ற வகைசெய்யும் பல்வேறு புதிய திட்டங்களில் ஒன்றாக, 'குளோபல் இனோவேஷன் அலையன்ஸ் இனோவேட்டர்ஸ் அகாடமி' எனப்படும் இந்தப் பயிலகம் திகழ்கிறது.

இந்தப் பயிலகத்தைப் பொருளியல் வளர்ச்சிக் கழகம் தொடங்கியது. இந்தப் பயிலகம் தன்னாட்சி பல்கலைக்கழகங்களில் பயிலும் 1,300க்கும் மேற்பட்ட மாணவர்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 17 நகரங்களில் வேலையிடப் பயிற்சியைப் பெற வகைசெய்யும்.




நிதி அமைச்சர் ஹெங் சுவீ கியட் 'ஹெச்–மேன்' எனப்படும் இயந்திரத்தைச் சோதித்துப் பார்க்கிறார். வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் (இடக்கோடி) உடன் உள்ளார்.

**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இதற்கிடையே, மற்ற நாடுகளில் உள்ளவர்கள் சிங்கப்பூர் தொழில்முனைவர்களுடன் தொடர்பை உருவாக்கிக்கொள்வதை எளிதாக்க என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு 'ஸ்டார்ட்அப் எஸ்ஜி நெட்வர்க்' எனப்படும் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

'புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சிங்கப்பூர் வாரம்' நிகழ்ச்சி, நாடுகளுக்கும் தொழில்துறைகளுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்திற்கு வாய்ப்பு அளிப்பதாக திரு ஹெங் கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பும் தேசிய ஆய்வு அறநிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இதில் தொழில்நுட்பம், தொழில்முனைவு உள்ளிட்ட கருப்பொருள்களை ஒட்டி கண்காட்சிகள், நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

மரினா பே சேன்ட்ஸ் மாநாட்டு மையத்தில் நேற்று தொடங்கி நாளை மறுநாள் வியாழக்கிழமை வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 10,000க்கும் அதிகமான வருகையாளர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.